1986 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-35)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருக்கிற இந்த பாலர் பள்ளிகளை எல்லாம் நர்சரிப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று அரசு கொள்கை அளவில் முடிவெடுத்த பிறகு, அதைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. தனியார் நர்சரிப் பள்ளிகளை ஒழிக்கிற வகையில், கிராமப்புறங்களில் அரசு பள்ளிகளை ஆரம்பித்துச் செயல் படுகிற கருத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் ஆரம்பித்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நடுவிலே குறுக்கிடுவது அவர்களின் உரிமையைப் பறிப்பதுபோல ஆகும். அதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இருந்தாலும் இன்றைக்குக் கிராமப் புறங்களில் உள்ள குழந்தைகள் ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும், நல்ல பழக்கவழக்கங்களை, சுகாதார முறைகளை ஆரம்பத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும், கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளுக் காக பாலர் பள்ளிகள் ஆரம்பித்து, அவர்களுக்கு 600 ரூபாய் மதிப்பீட்டில் கல்வி உபகரணங்களும், விளையாட்டுக் கருவிகளும் வழங்கி, அதை 3, 4 வயதுக் குழந்தைகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பேச முடியாதோர், காது கேளாதோர் பள்ளி.

*218 வினா.—திரு. எஸ். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்தில் உள்ள பேச முடியாதோர் மற்றும் காது கேளாதோர் பள்ளியை, கடலூருக்கு மாற்றும் கருத்துரு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆம்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைக் கடலூரில் அமைக்கும் கருத்துரு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எப்போது முதல் இது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, இப்போதுதான் இதுபற்றிய கருத்துரு மாவட்ட சமூக நலத் துறை அலுவலரிடமிருந்து சமூக நலத் துறை இயக்குநருக்கு வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் சமூக நலத் துறை இயக்குநர் பரிசீலித்து, பிறகு அதை அரசுக்கு அனுப்புகிறபோது, அதை நல்ல முறையில் ஆய்ந்து ஒரு முடிவெடுக்கப்படும்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, சமூக நலத் துறையால் கடலூரில் கண்பார்வையிழந்தோர் பள்ளி அமைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்தில் காது கேளாதோர், பேச முடியாதோர் பள்ளி இருக்கிறது. இந்த இரண்டையும் ஒரே இடத்தில், கடலூரில் அமைப்பதற்காகத்தான் இந்தக் கேள்வியையே கேட்டேன். ஆகவே இதைச் சேர்க்க வெகு விரைவில் முடிவெடுத்து, வரும் நிதியாண்டிலேயே அதைக் கடலூருக்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, மிக விரைவாக அதை ஆய்ந்து முடிவெடுப்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை 'தினகரன்' நாளேடு வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை விதி 162-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், 'தினகரன்' பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவர வேண்டுமென்று முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது எவ்வாறு மேலவை விதியின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதி 162-ன்படி, இந்த மன்றத்தில் நடக்கிற எந்தப் பிரச்சினையையும் திரித்தோ, மாற்றியோ வெளியிடக்கூடாது என்ற அடிப்படையில், இங்கே நடைபெறுகிற விவாதங்கள் சரியான முறையில் வெளியிடப்பட